உ

ஸ்ரீ விதிரொஸய சீரு விஜூரகரு தவொயவெரு ஸாவாஜெ

॥ ஸ்ரீ ஶங்கரவிஜயவிலாஸே ... அவதார கதா ॥

ஸ்ரீசங்கர விஜய விலாஸம்,

அவதார கதை

வித்வான் பிருமஸ்ரீ
கச்சபேச்வர சாஸ்திரிகள் அவர்களால்
மொழிபெயர்க்கப்பட்டு,
நெல்லிச்சேரி அருணாசல சாஸ்திரிகளால்

கும்பகோணம் "ஸ்ரீகோபால விலாஸ பிரஸ்ஸில்"
பதிப்பித்து பிரசுரிக்கப்பட்டது.
ஸ்ரீமுக-வரு ஆனி-மீ
1933.
அணா 2

... OF THE REGISTRAR ... MADRAS
1 JUN 1933

Q22
N33
223277

𑌶𑌾𑌰𑌦𑌾𑌯𑍈 𑌨𑌮𑌃 ॥

𑌶𑍍𑌰𑍀 𑌶𑌙𑍍𑌕𑌰𑌭𑌗𑌵𑌤𑍍𑌪𑌾𑌦𑌾𑌵𑌤𑌾𑌰 𑌕𑌥𑌾 ॥

𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌪𑍁𑌰𑌾𑌣𑌾𑌨𑌾𑌮𑌾𑌲𑌯𑌂 𑌕𑌰𑍁𑌣𑌾𑌲𑌯𑌮𑍍 ।
𑌨𑌮𑌾𑌮𑌿 𑌭𑌗𑌵𑌤𑍍𑌪𑌾𑌦𑌶𑌙𑍍𑌕𑌰𑌂 𑌲𑍋𑌕𑌶𑌙𑍍𑌕𑌰𑌮𑍍 ॥ ॥ ௧ ॥

வேதம் ஸ்மிருதி புராணங்களுக்கு இருப்பிடமாகவும் கருணைக்கு இருப்பிடமாகவும் உலகத்துக்கு க்ஷேமத்தை செய்பவருமான ஸ்ரீபரமேசுவரர் அவதாரமான பகவத்பாதாளை நமஸ்கரிக்கிறேன்.

ஸ்ரீசித்விலாஸ யதீசுவருளுக்கும் விக்ஞானகந்தமகரிஷிக்கும்
நடந்த ஸம்வாதரூபமான சங்கரவிஜயவிலாஸத்தில்
ஐந்தாவது அத்தியாயம் தமிழ் உரையுடன்.

𑌤𑌤𑌸𑍍𑌸 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌶𑌮𑍍𑌭𑍁𑌰𑍍𑌲𑍋𑌕𑌵𑌿𑌰𑌕𑍍𑌷𑌯𑌾 ।
𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌵𑌿𑌰𑍋𑌧𑌾𑌨𑌾𑌂 𑌉𑌚𑍍𑌛𑍍𑌰𑌿𑌤𑌾𑌨𑌾𑌂 𑌜𑌿𑌹𑍀𑌰𑍍𑌷𑌯𑌾 ।

223277
Q22
N33
MADRAS 4 JUN 1933

ஶைவஸ்ய தஸ்ய ஶிவகுரோர்தீக்ஷிதஸ்ய விஶேஷத: |
ஸ்வீயாவதாரஸத்ருஶஸந்தானம் தித்ஸயா || ||௨||
பௌத்தாதிகோரஸம்மக்னலோகோத்திதீர்ஷயா |
வேஷாம்போஸா நானாவிதாஶ்சர்ய த்ருஶ்யலீலாதிகாங்க்ஷயா || ||௩||
வித்வத்தாம் கௌடதேஶஸ்தானாம் பாண்டித்யவிவித்ஸயா |
ஶ்ரீதக்ஷிணாமூர்த்திரூபோऽஸௌ வ்ருஷாசலமுபாவஸத் || ||௪||

அப்படிப்பட்ட பகவானுன பரமேசுவரன் ஸமஸ்தஉலகங்களை காப்பாற்றும்பொருட்டும் வேதம் ஸ்மிருதிகளுக்கு விருத்தமான துர்மதங்களை கண்டிக்கும் பொருட்டும் மகாபண்டிதராயும் ஸத்புத்திரனை அடையதபம்செய்து கொண்டிருக்கிற சிவகுரு தீக்ஷிதருக்கு தனது அவதாரத்துக்குத் துல்யமான புத்திரர்களை கொடுப்பதற்கும் பௌத்தாதிகளாகிற இருளால் மூடப்பட்ட உலகத்தை உத்தாரணம் செய்யும்பொருட்டும், தனது அநேக விதமான ஆச்சரியத்துடன்கூடிய லீலைகளை உலகத்தில் காண்பிப்பதற்கும் கௌளதேசவாஸிகளுக்கு பாண்டித்யத்தையும் பரி

க்ஷத்திரையையும் செய்விக்கவேண்டியதற்கும் தக்ஷிணகைலாஸமென்றுவழங்கும் விருஷபாசலத்தை அடைந்தார். 1, 2, 3, 4.

ஸ்வர்ணமுகீதி விக்யாதா கங்கேவாகௌகநாசிநீ ।
த்ருமாஸ்ஸுரத்ருமா இவ தத்ர த்யாஸுஃ ஸமீஹிதம் ॥௫॥
லோகாஸ்ஸர்வே ஸுமநஸோ வ்ருஷவாஸா நிர்ஜரா இவ ।
அஜரா அலஸத்யக்தா நிர்நிமேஷா ஸுயோஷிதாஃ ॥௬॥
அத்ர கேசவ பாநீயம் காமதம் த்ருஷ்டிப்ரதா ।
நமஸ்ஸ்ருஜந் ஸம்வீதா ராஜதே ஜகதீதலே ॥ ॥௭॥
கிஞ்ச கோமலமத்ரீஹ் ... ப்ரஸித்யதே ।
அயஞ்ச ஜாதரூபஸ்ய ஸாரஸ்தே வ்ருஷபாசலஃ ॥௮॥

எந்தவிருஷபாசலத்தில் சுர்ணமுகியென்ற நதியானது கங்கையைப்போல் சர்வபாபங்களையும்போக்குகின்றதோ அவ்விடமிருக்கும் விருக்ஷங்கள் தேவதருக்கள்போல் பலங்களை அளிக்கின்றன. ஜனங்களெல்லோரும் தேவர்கள்போல் நல்ல மனமுள்ளவர்களாகவும் சோம்பலில்லாமலும் கிழத்தனமில்லாதவர்களாகவு

223297

மிருக்கிறார்கள். ஸ்திரீகளும் தேவஸ்திரீகளுக்குசமமாக காணப்படுகிறார்கள். குபேரபட்டிணத்துக் கொப்பாக காலடியென்று பெயர்பெற்ற பட்டிணமிருக்கிறது. ஆனால் கைலாஸமலையை வெள்ளிக்கு வாசகமான துர்வர்ணமென்று கூறப்படுகிறது. இந்த விருஷபமலையை வெள்ளிக்குவாசகமான ஜாதரூபமென்று அதாவது அடையப்பட்ட உருவங்களின் காந்தியினால் பிரகாசிக்கின்றது. 5, 6, 7, 8,

[illegible] ।
[illegible] ॥௯॥
[illegible] ।
[illegible] ॥௧௦॥
[illegible] ।
[illegible] ॥௧௧॥
[illegible] ।
[illegible] ॥௧௨॥

அருந்ததிவஸிஷ்டர்கள்போலும் தங்கள் தபத்தினுலேற்பட்ட தேககாந்தியினுல் திக்குகளைப் பிரகாசப்படுத்திக்கொண்டும் அதிகசிரமமிருந்தாலும் சாந்தகுணத்துடன் தபம் செய்யும் சிவகுரு ஆரியாம்பாளென்னும் அந்த தம்பதிகளைப் பார்த்து கருணாநிதியான ஈசுவரன் ஆச்சரியமடைந்து இவர்களின் மனதிலிருக்கும் இஷ்டத்தை சீக்கிரத்தில் இருவர்களுக்கும் நான் கொடுக்காவிட்டால் இவர்களின்பாபமானது என்னைத்தொடரும் என்று நிச்சயித்து கபடமாகஅனுக்கிரகம்செய்ய மனமிறங்கினுர். 9-12.

ப்ரத்யூஷே வா த்ரியாமாந்தே ஸ்வப்நே ஸ்வப்நாவஸாநகே |
வ்ருஷாத்ரிஶிகரஸம்ஸ்தேந வ்ருத்தவேஷேண ஸ்வாமிநா ||கங||
ஆவிர்பூய கதா ஸ்வப்நே தேதயோ ஸாந்தவாயவி |
ஸநிதேஷஜநீவேஷா க்ருஹ்ஜி: ஸமிதோஷ்யதே |கச||
யாமிந்யா வேஸஞாயாம் ப்ராய: ஸைவாதி தவோசிதே |
ஸுவாஸஸவநம் ஸந்தோஷ்யாம்ஸ்வப்நே ச ஸம்யாகமே ||கரு||

விடியற்காலத்தில் மலையகிரியிலிருந்துகிளம்பி புஷ்பங்களின்

தாதுக்களை எழுத்துக்கொண்டு மலர்ந்த ஆமல் புஷ்பங்களின் வாஸனையுடன் காற்றுவீசிக்கொண்டிருக்கும்பொழுது சுக்கிரோதயகாலத்தில் மரப்பொந்துகளிலிருந்துகொண்டுகத்துகின்றபக்ஷிகளால் சூழப்பட்ட காலத்தில் ராத்திரிமுடிவடையுந்தருணத்தில் தாமரைகளும் மலர்ந்துகொண்டேயிருக்க சந்திரனும் தன் வீட்டுக்குச்சென்றுகொண்டேயிருக்கும்பொழுது, 13–15.

ஸ்வப்நே ஸமாகத விப்ரரூபேண வ்ருஷகேதுர் ஹ்ருதீஸ்வர: ।
யாவதிஷ்டம் க்ருஹீதம் வோ ரோவி ப்ராப்ஸ்யதாஹம் ॥௧௬॥
இதீரயித்வா ஸ்வப்நேஷு வ்ருஷபத்வஜ நாம்பராஜ: ।
விஸ்மயேந ததா பஸ்யந் ஸர்வாந்தர்ஜகத்குரும் ॥௧௭॥

விருஷாசலேசுவரர் பிராம்மணவேஷங்கொண்டு சொப்பனத்தில் வந்து நீங்கள் உங்களிஷ்டத்தை கேட்டுக்கொள்ளுங்கள் சீக்கிரத்தில் தருகிறேன் என்றுசொல்லி சற்றுநேரம் முகம் மலர்ந்து ஆச்சரியத்துடன் அந்ததம்பதிகளை பார்த்துக்கொண்டேநின்றார்.

ஸ்வப்நே தாவதிஜ்ஞாய ரோமஹர்ஷ யுதாநந்போமக: ।

[illegible] ॥ ௧௮॥
[illegible] ।
[illegible] ॥ ௧௯॥
[illegible] ॥ ௨௦॥

சொப்னத்தில்கூட அந்த தம்பதிகள் மஹேசுவரரை தியானித்து விருஷாசலேசுவரர் நமக்கு வரங்களை கொடுக்கவந்திருக்கிறார். என்று அறிந்துகொண்டார்கள் எப்பொழுதும் பரமேசுவரனிடத்தில் மனம் சென்றுகொண்டிருந்தபடியால் இம்மாதிரி நிச்சயித்தார்கள் உடனே பக்தி, ஆதரவு, பயம் இவைகள் மனதில் புகுந்தபடியால் எழுந்து பகவானுடைய சரணகமலங்களை நமஸ்கரித்தார்கள். 18, 19, 20.

[illegible] ।
[illegible] ॥ ௨௧॥
[illegible] ।
[illegible]

அந்த தம்பதிகள் வரமளிப்பதாகச் சொன்ன அந்தப்பிராம்மண னிடம் தங்கள் கஷ்டத்தைகளை தெரிவித்தார்கள் பகவானும் எல்லா சாஸ்திரங்களையுமறிந்தவனாகவும் அல்பமான ஆயுளுடையவனாக ஒருபிள்ளை தங்களுக்குவேண்டுமா? தீர்க்காயுசுகளாகவும் மூடர் களாகவும்வெகுபிள்ளைகள் வேண்டுமா என்றுகேட்டார். 21—22.

[illegible] ।
[illegible] ॥௨௩॥

[illegible] ।
[illegible] ॥௨௪॥

[illegible] ।
[illegible] ॥௨௫॥

இப்படிச் சொன்னவுடன் மூடர்களான அநேகம் புத்திரர் களால் என்ன பயன்; குறைந்த ஆயுளுடையவனாகயிருந்தபோதி லும் வேதம் வேதாங்கங்களின் உண்மை அறிந்த ஒருபிள்ளையே போதும். அவனே நமது வம்சத்தை உத்தாரணம் செய்வான். பா

மேசுவரன் சம்ஸாரபந்தத்தை நீக்குவதுபோல் ஆகையால் நற்குணமுடைய ஒருபுத்திரன்போதும் என்று ஆரியாம்பாள் சொன்ஞள். ஈசுவரனும் அப்படியே உண்டாகட்டுமென்று சொல்லி மறைந்தார் இவ்விதம் சொப்பனங்கண்டார்கள். 23--25.

உஷஸ்யதோ நிஶி த்ருஷ்ட்வா ஸ்வப்நம் தௌ மிதிஜாயயம்: ।
ஸம்வாத்ரம் த்தவா நேவ வ்ருஷாவக்ஷ்ய தாஶ்ரயம்: ||௨௬||
விப்ராயக்ஷம் க்ஷரோத்ய ஸ்ரீகம்ஶோஸிவ பாஷ்க்ஷ்ய ।
தத்வஸ்வ ஊம் வதீஸ்கா ஸஷயம் ஸ்வைத்ரஸ்ம்நம் ||௨௭||
ஸதோத்வஹஜநாஶ ஹும் பூண்ஸ்த்ய ஷவநம் மதள ।
ஸஞ்சத்ய விபூவபூம்ஸ்வ வஸாஷ்க நகாஷ்ஷி: ||௨௮||
ஶ்ரீவபூவாம்ஸி தெஷாஷ்ஷ ஜஹ்ருஷாதே கயஸ்வர ।

விருஷபாத்திரீசுவரனுணபரமேசுவரர்நம்மிடத்தில் அனுக்கிரகித்து ஸத்புத்திரனை வரமாக அளித்துச் சென்றார் என்று நிச்சயித்துக்கொண்டு மிருகண்டுரிஷியின் புத்திரனுகிய மார்க்கண்டேயரை தீர்க்காயுசாகச் செய்ததுபோல் நமது புத்திரனையும்

செய்வார் என்று நினைத்து சொப்பனமானது சபலமாயிற்று என்று சந்தோஷித்து தியானத்தை முடித்துக்கொண்டு ஈசுவரனை நமஸ்கரித்து படுக்கையிலிருந்து எழுந்து காலையில் செய்யவேண்டிய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு பிராம்மணர்களுக்கு வஸ்திரம் அன்னம் தங்கம் முதலானவைகளால் திருப்திசெய்வித்து அவர்களிடமிருந்து மனப்பூர்வகமான ஆசீர்வாதங்களைப்பெற்று அந்ததம்பதிகள் சந்தோஷித்தார்கள்.

[illegible] ||௨௧||
[illegible] ।
[illegible] ||௧௦||
[illegible] ।
[illegible] |௧௧|

போஜனம்செய்த பிராம்மணர்களின் அனுக்ஞையின்பேரில் பிராம்மணர்கள் புஜித்தமிச்சத்தை சாப்பிடவிரும்பினார்கள் அந்த அன்னத்தை புஜிக்கும்பொழுது ஈசுவரருடையஜோதியானது

தம்பதிகளின் கர்ப்பத்தில் புகுந்தது மிக சந்தோஷத்துடன் புஜித்தார்கள் அதுமுதல் ஆரியாம்பாள் கெர்ப்பம் தரித்தாள் கிழக்குதிக்கானது பூர்ணசந்திரனை தரிப்பதுபோல் அந்தகர்ப்பத்தினால் விளங்கினாள். (29-31)

[illegible] ।
[illegible] ॥௩௨॥
[illegible] ।
[illegible] ॥௩௩॥
[illegible] ।
[illegible] ॥௩௪॥
[illegible] ।

பரமேசுவரரே நேரில்வந்து சொல்லும்வார்த்தை பொய்யாகுமாவென்று சத்தியமாக நினைத்தார்கள். ஏற்கனவே தவம் செய்து மிகவும் இளைப்படைந்த ஆரியாம்பாளின் தேகமானது நாளுக்குநாள் விருத்தியடைந்து அக்கினியை உட்கொண்ட

வன்னிமரம்போலவும் கெங்கையில் மூழ்கிக்கொண்டிருக்கும் ஐராவதயானைபோலும் புதையல் புதைந்திருக்கும்பூமிபோலவும் அக்னி குண்டத்தில் உமியில் ஆழ்ந்திருக்கும் திரேதாக்னிபோலும் ஹிருதயத்தில் ஆழ்ந்த ஞானத்தையுடைய மகரிஷியின் மனோகதிபோலும் பரமசிவத்தினிடத்தில் மனதைச்செலுத்திப் பிரகாசித்தாள். 32—34.

[illegible] ௩௫ ।
[illegible] ।
[illegible] ॥௩௬॥
[illegible] ।
[illegible] ॥௩௭॥

• சிவகுருவானவர் தனது கர்ப்பிணியானபாரியையைப்பார்த்து விருஷாசலேசரை ஏகாக்ரமனதாக தியானித்துக்கொண்டு தீனர்களிடத்திலும் மகான்களிடத்திலும் பரமேசுவரனுக்குள்ள தயவை துதித்துக்கொண்டு சந்திரனைக்கண்ட சமுத்திரம்போல்

ஆநந்தப்பெருக்கை அடைந்தார் நல்லமுகூர்த்த யோகங்களுள்ள பத்தாவது மாதம் வந்தது (35, 36, 37,)

[illegible]
[illegible] ।௩௮।
[illegible] ।
[illegible] ॥௩௯॥

வசந்தருதுவில் மாதவமென்கிற வைசாகமாதத்தில் ஐந்து கிருகங்கள் உச்சமாகயிருக்கும் வேளையில் மத்தியானகாலத்தில் அபிஜித்என்ற முகூர்த்தத்தில் திருவாதிரைநக்ஷத்திரத்தில்உதய பர்வதமானது அதிக தேஜோவானுகயிருக்கும் சூரியனைப்போல பார்வதிதேவியானவள் ஸுப்பிரமணியரைப்போல் ஒரு புத்திரனைப் பெற்றாள். (38-39)

[illegible] ।
[illegible] ॥௪௦॥
[illegible] ।
[illegible] ॥௪௧॥

22327

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

ஜயந்தனைப்பெற்ற சசிதேவியைப்போலும் வேதவியாஸரை பெற்ற ஸத்தியவதிபோலும் அதிக பிரஸவ உபத்திரவமடையாமல் சற்று வேதனையேற்பட்டதுபோல் அநுபவித்து எதிரில் நோக்கும்பொழுது நான்கு கையுடனும் கம்பீரமானதேகத்தோடனும் முக்கண்ணும் சந்திரனால் அலங்கரித்த சிரமும் கண்ணுற்று பார்க்கமுடியாத தனது தேஜஸானால் பத்துதிக்கையும் பிரகாசப்படுத்துவதும் ஸூரிய கிரணங்கள்போல் சிவப்புக்கலந்த வெளுப்பினால் ஒரேஉருவமாகயிருப்பதைப்பார்த்து பயங்கொண்டு நடுங்கியவளாகவும் ஆச்சரியப்பட்டு இதென்ன ஆச்சரியம் எனதுகோரிக்கைவேறு இவ்வுருவம் வேறாகயிருக்கிறதே என்று கவலையடைந்திருக்கும்பொழுது, 40-43.

[illegible] ।
[illegible] ॥௨௪॥
[illegible] ।
[illegible] ॥௨௫॥
[illegible] ।
[illegible] ॥௨௬॥
[illegible] ।
[illegible] ॥௨௭॥

அதிஸந்தோஷமடைந்து நமஸ்காரஞ்செய்யமுயலும்பொழுது தேவர்களும் கந்தர்வர்களும் மனிதர்களும் புஷ்பமாரிபொழிந்தார்கள். தாமரைபுஷ்பவாஸனையுடன் காற்று சுகமாக வீசிற்று. திக்குக்கள் பிரகாசித்தன. பூமியே ஸந்தோஷமடைந்தது. யாகஞ்செய்யும் அக்கினிகள் பிரதக்ஷிணமாக ஜ்வலித்தன. தன் இஷ்டத்துக்கு வேறான உருவந்தோன்றிய போதிலும் மிக வணக்கத்துடன் சோம்பலில்லாமலும் விருஷபாசலேசுவரரே ஆவிர்ப்பவி

த்து விட்டார் என்று நிச்சயித்து, (44-47)

ஸாத்விகஸ்ய சை ஷீஜா பாலஸ்யாவகூ சோவிதா: ।
இதயம் ஸா ப்ராயச்யாசைல ஸாக்ஷீ ஹர்ஷேயா சஹோஸ்ராம் ॥

ஜ தேவகுழந்தைகளுக்கு உசிதமான லீலைகளை காண்பிக்க வேண்டுமென்று பதிவிருதையான ஆரியாம்பாள் மகேசுவரனை பிரார்த்தித்துக் கொண்டாள்.

ததஃ கிசோபாபவசேதாவி கிளுவிசிவலிதாயநஃ ।
தாவயநவானனா ஹஸைதா ஙாரோசைஷஃ கூணாஜஸன! ச்சு
சூயமூரஸாவி தசைஷஸாஸீநாயாசைராஹிதஜூஸா ।
ஜஹசைநாஹசுரீஜாயா ஜசைஹஸீதாரநீஷ்யமீ ॥ருo॥
தத த்ரா ஸுசுநாபெயூரவி யசெயாவிதஜெயாவாநு ।
தஃதஃப்ரூஙகவா வீதா செஸாzவீ நியிம் ப்ராசேப்ய நியமூநஃ ॥
ஜஙஜஙசெஷ நிதபாம் விசேதக விசேதக ஸம் நாஷ்யஜக்ஷ்யத ।
சூவிஹஹஹூரவஜோ ஜாநா திஸம் ஹோஜரூரவொயபவஸா ॥ருஉ॥

பிறகு இளங்குழந்தையுருவங்கொண்டு கால்கைளை அசைத்

யைக்கொண்டு உதட்டையும் அசக்கிக்கொண்டு அழத்துடங்கினள். ஆரியாம்பாளும் உலகத்தைமயக்கும் பரமேசுவரன் மாயையினால் மோகித்த மனமுள்ளவளானாள். அவ்விடமிருந்த விருத்த ஸ்திரீகளும் அச்சமயத்துக்குரிய காரியங்களைச் செய்தார்கள். புத்திர ஜன்மாவை கேட்ட பிதாவன சிவகுருவும் தனமில்லாதவனுக்கு புதையல் கிடைத்தால்போல் ஆனந்தமடைந்தார். பகவானுடைய ஆவிர்ப்பாவத்தை அறிந்த ஆரியாம்பாள் பதிக்கு இதுவிஷயத்தை அறிவிக்கவில்லை. 49–52

[illegible] ।
[illegible] ॥௫௧॥
[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥௫௨॥
[illegible] ।

[illegible]

உடனே சிவகுருவும் ஸ்நானம் செய்து பிராம்மணர்களை அழைத்து ஸுமங்கலிஸ்திரீகளையும் அழைத்து புத்திரஜன்மாவை உத்ஸவமாகக் கொண்டாடினார். தீக்ஷிதர்களாகவும் வித்துவான்களாகவுமிருக்கும் பிராம்மணர்களுக்கு தனங்களையும் தானியங்களையும், வஸ்திரங்களையும், பழங்களையும் தானம்செய்தார். ஸ்திரீகளுக்கும் உசிதமான தானங்களைகொடுத்தார் நல்ல அலங்காரங்களைச்செய்து தக்ஷிணைகளுடன் நல்லஜாதிபசுக்களை தானம் செய்தார். தானம்செய்யும்பொழுது விருஷாசலேசுவரர் திருப்தியடையவேண்டுமென்று தானம்செய்தார். 53–56½

[illegible]

ஆகர்ணாந்தாயதநயநம் விஸ்த்ருதவக்ஷஸம் ॥௫௯॥
ஆஜாநுபாஹும் விஶாலபாலம் ஈஷத்ஸ்மிதம் ।
ஈஷதாரக்தாபாங்காப்யாம் நேத்ராப்யாம் தர்ஷிதாம்புஜம் ।௬௦।

பிறகு சிவகுருதீக்ஷிதர் பிராம்மணர்களை அதிகபிரீதியுடன் பந்துக்களுடன் திருப்திசெய்வித்து சந்தோஷித்துகொண்டிருந் தார் குழந்தைபருவத்திலேயே நீண்டகண்ணும் விரிந்தமார்பும் நீண்டகைகளும் அகன்றநெற்றியும் கொஞ்சம் சிவந்தகடையை யுடையகண்களால்அவமதியடைந்த தாமரைக்கண்ணையுடையவனு ம் முகத்தின்காந்தியினால்அபஜயமடைந்த பூர்ணசந்திரனையுடைய வனும் நான்குபக்கங்களிலும் பாவுகின்ற வெளுப்பு காந்தியினால் சூரியனைப்போலும். 57-58-59-60

ஸம்பூர்ணகலாகார வதநச்சவிநிர்ஜிதம் ।
ஆதித்யஸத்ருஶம் தேஜஸா விஶ்வதோவ்யாப்தகாந்திபிஃ ॥௬௧।
ஸூக்ஷ்மம் த்ருஷ்ட்வா ததா தேஜஃ ஸம்ப்ரஹ்ருஷ்டமநா த்விஜஃ ।
ஸர்வம் ஸர்வஜ்ஞம் ஆதிஷ்டம் ஸ்ரீகண்டஶிவஸந்நிபம் ।௬௨

[illegible] ।
[illegible] ।
[illegible] ॥

சங்குசக்கிரம் துவஜம் இவைகள்போன்ற ரேகைகளால் அடையாளமிட்ட பாதங்களும் மின்னலுக்கு ஒப்பான தேகமும் முப்பத்திரண்டு லக்ஷணங்களுடனுமிருக்கும் அந்தகுழந்தையை பார்த்தமாத்திரத்திலேயே ஆனந்தத்தை கொடுப்பதுமான சிசுவை கோபிகை ஸ்ரீகிருஷ்ணனைப்போலும் சகோரபக்ஷி சந்திரனைப் போலும் எவ்வளவுதடவைகள் தர்சனம்செய்தாலும் திருப்தி யடையவில்லை. இப்படி குழந்தையைபார்த்துக்கொண்டு சீராட்டிக்கொண்டும்ஆரியம்பாள் அதிசுகத்துடனிருந்தாள். 61-62-63-64

விஜ்ஞாபநங்கள்:-- ஸ்ரீ [illegible]
[illegible] ।
[illegible] ॥

ஸ்ரீசிஷ்யா: — [illegible] ॥௧௧॥

விக்ஞானகந்தர் என்ற சிஷ்யர் கேழ்க்கிறார்- ஹே சித்விலாஸ குருவே ஸ்ரீமதாசாரியாளின் அவதாரசம்பந்தமான சரித்திரத்தைக்கேட்டு என்மனம் சந்தோஷமடைந்தது. திரும்பவும் அவருடைய மேலேநடந்த சரிதத்தையும் எனக்குச்சொல்லவேணும் வந்தனம்செய்கிறேன். என்று சொன்னதைக்கேட்ட சித்விலாஸயதீசுவரரும் அவரது சரிதம் பண்டிதர்களால் கேழ்க்கக்கூடியதும் மனதில் தியானிக்கக்கூடியதுமானதேசிகேந்திராளின் ஆவிர்பாவ சரிதத்தை எவன்படிக்கிறானோ எழுதுகிறானோ அவனேபூமியில் பரமேசுவரனுக்கு அனுக்கிரகபாத்திரனாகுறான் “

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌰𑌣𑍍𑌯𑌤𑍀𑌰𑍍𑌥 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌕𑌨𑍍𑌦𑌯𑍋𑌰𑍍
𑌸𑌂𑌵𑌾𑌦𑍇 𑌶𑌂𑌕𑌰𑌵𑌿𑌜𑌯𑌵𑌿𑌲𑌾𑌸𑍇 𑌷𑌷𑍍𑌠𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

இப்படி அவதரித்த பகவத்பாதாள் ஸந்யாஸாசிரமத்தை இளமைபருவத்திலேயே அடைந்துகோவிந்தபகவத்பாதாளிடம் உபதேசம்பெற்று வாராணசி க்ஷேத்திரத்தில்வந்து பிரஸ்தானத் திரயபாஷ்யத்தைசெய்து பத்மபாதர் முதலிய சிஷ்யர்களுக்கு பாஷ்யோபதேசங்கள் செய்து திக்விஜயம் செய்யும் பொழுது காஞ்சீக்ஷேத்திரத்தில்வந்து ராஜஸேன மகாராஜாவைக்கொண்டு தேவாலயத்திரயங்கள் செய்வித்து ஏகாம்பரேசருக்கும்காமாக்ஷிக்கும் சிவகாஞ்சியென்னும் ஸ்தலத்திலும் வரதராஜருக்கு விஷ்ணுகாஞ்சி யென்னும் ஸ்தலத்திலும் ஆலயநிர்மாணம் செய்தார். வெங்கடகிரிக்குசென்று பிறகு சிதம்பரக்ஷேத்திரத்தில் வந்து பத்துதினம் வாஸம்செய்து ஆகாசரூபியான ஈசுவரனை துதித்து மத்தியார்ஜுன க்ஷேத்திரத்துக்கு வந்து மகாலிங்கத்தை துதிசெய்தார். கோகர்ணக்ஷேத்திரம்சென்று மகாபலேசு

வரர் என்னும்சிவனை அர்ச்சித்து துதிசெய்தார். இவ்விதம் அநேக க்ஷேத்திரங்கள் சென்று துர்மதங்களை கண்டித்து அத்வைத மதத்தை ஸ்தாபித்து லோகஉத்தாரம்செய்த அந்தபரமாசாரியாளிடத்தில் க்ஞானபக்தியை பூர்ணமாகவைத்து தியானிக்கவேண்டும்.

பகவத்பாதாளின் அவதாரச்சுருக்கம்.

(முற்றிற்று.)

223277



கடவுள் துணை!

சிவராத்ரி ஆராதனம் ஸ்ரீ கவசம்,

விகாலவஸ்து (தமிழ் அர்த்தம்) 0—2—0

சிவாபராதக்ஷமாபண ஸ்தோத்திரம் 0—2—0

தேவீபிரணவ சுலோகஸ்தோத்திரம்
காசிபஞ்சகஸ்தோத்திரம் ஏகச்லோகி
தமிழ் அர்த்தத்துடன் } 0—1—6

சங்கராச்சாரியஸ்வாமிகளாலியற்றிய
விஷ்ணுஸ்துதி. } 0—1-6

மகாபாரதம் அனுசாஸனபர்வத்தில் ஜலதானம் முதலியதுகளின்பலன், வைத்தியநாததீக்ஷிதீயம் வர்ணாசிரமதர்மகாண்டத்தில் தானம், பிரதானமும் பீமஸேனரால
செய்யப்பட்ட மானஸிக பூஜை.
தமிழ் அர்த்தத்துடன் } 0—2—0

சிராத்தபிரசம்சை, சிராத்தத்தை
கொண்டாடுதல், சிராத்தவிஷயமான
உபந்யாஸம், சிராத்தத்தின் ரகசியம். } 0-1-6

ஸ்ரீசங்கர பகவத் பாதாளியற்றிய சியாமளா
நவரத்னமாலிகா, தேவீபஞ்சரத்னம், அம்பா
பஞ்சரத்னம், மீனாக்ஷி ஸ்தோத்ரம், } 0—2—0

ஸ்ரீ சங்கராசாரியாரவர்களால் செய்யப்
பட்டராமபுஜங்கஸ்தோத்திரம் கிருஷ்ணா
ஷ்டகமும் தமிழ் அர்த்தத்துடன் } 0—2-6

இன்னும் அநேகபுஸ்தகங்களும் கிடைக்கும்.

அருணாசலசாஸ்திரிகள்

நெல்லிச்சேரி அய்யம்பேட்டை P.O